Source: *Tamil Murasu,* p2
Date: 31 May 2016

தனியார் வீட்டு விலைகள் 0.3% இறக்கம்

தனியார் வீட்டு விலைகள் மார்ச் மாதத்தைப் போலவே ஏப்ரல் மாதத்திலும் இறங்குமுகமாகவே இருந்தன. நேற்று வெளியிடப்பட்ட 'எஸ்ஆர்பிஐ' எனும் சிங்கப்பூர் குடியிருப்பு விலைக் குறியீட்டு அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக் கப்பட்டது. மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் அதற்கடுத்த மாதத்தில் ஒட்டுமொத்தமாக 0.3% விலைக் குறைவு இருந்ததாக தேசியப் பல்கலைக்கழகத்தின் சொத்துச் சந்தை கல்விக் கழகம் தொகுத்த 'எஸ்ஆர்பிஐ' காட்டுகிறது. மத்திய வட்டாரத்தில் சிறிய வீடுகள் தவிர மற்றவற்றின் விலைக்குறைவு 0.4% ஆக இருந்தது. மத்திய வட்டாரத் துக்கு வெளியே சிறிய வீடுகள் தவிர மற்றவற்றின் விலை 0.2% குறைந்தது. 506 சதுர அடிக்கும் குறைந்த பரப்பளவு கொண்ட சிறிய வீடுகளின் விலையும் 0.2% இறங்கியது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.